சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.07.01.2026
AS.No.2/2019
CW1 : அழகேசன் (வயது 37 ) த/பெ. மனோகரன்
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**<u>விசாரணை</u>**

நான் இலால்குடி, சார்பு நீதிமன்றத்தில் இளநிலை கட்டளைதாரராக பணியில் இருக்கிறேன். எனக்கு நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மே.மு.வ.எண்.2/2019 ல் 19 வது எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை சார்வு செய்வதற்காக எனக்கு 22.08.2025 ஆம் தேதியன்று கொடுக்கப்பட்ட நீதிமன்ற கட்டளையின்படி மூவாரம்பாளையம், மேலூருக்கு 25.08.2025 ஆம் தேதியன்று மேற்சொன்ன 19 ஆம் எதிர்மனுதாரரின் வீட்டு முகவரிக்கு சென்று பார்த்ததில் 19 ஆம் எதிர்மனுதாரர் செல்வமணி வீட்டில் இருந்தார், அவரிடம் அழைப்பாணையை கொடுத்ததற்கு தான் திருமணம் ஆகி இந்த ஊருக்கு வந்து விட்டதால், இந்த வழக்கிற்கும் தனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று கூறி அழைப்பாணையை வாங்கி படித்து பார்த்த பின்பு கையெழுத்து செய்ய மறுத்துவிட்டார், அதனால் அழைப்பாணையை நான் திரும்ப ரிட்டன் செய்துவிட்டேன். அதற்கான பதிவுகள் அடங்கிய எனது கைக்குறிப்பேட்டையும், சி பதிவேட்டையும் நீதிமன்ற பார்வைக்காக சமர்பிக்கிறேன்.

/signed/
அழகேசன்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

R.MOHANA
Digitally signed by R.MOHANA
Date: 2026.01.07 17:47:24 +0530

சார்பு நீதிபதி
இலால்குடி